பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

வண்ணப் பதிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 19 வெள்ளிக்கிழமை (02-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 68

## கொழும்பு குண்டுவெடிப்பு

# இடிபாடுகளின் இடையே இன்னமும் 160 சடலங்கள் சிக்குண்டுள்ளன!

## எண்பது சடலங்களே நேற்று வரை மீட்பு

கொழும்பு, பெப்ரவரி 2

**கொழும்பு மத்திய வங்கி முன்புறத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்த எண்பது பேரின் சடலங்களே நேற்று முன்னிரவு வரை மீட்கப் பட்டிருக்கின்றன.**

**மேலும் 160க்கும் மேற்பட்ட சடலங்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என இந்திய வானொலி அறிவித்தது.**

புல்டோஸர் மற்றும் கனரக வாகனங்கள் மூலம் இடிபாடுகளை அகற்றும் பணி நேற்றுக் காலை மீண்டும் ஆரம்மானது. நேற்று முழுநாளும் மீட்புப் பணி தொடர்ந்தது.

நேற்று முன்தினம் மீட்கப்பட்ட அறுபது சடலங்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டின் நிறை 1000 கிலோ

ஆயிரம் கிலோ நிறையுடைய வெடிகுண்டே மத்திய வங்கியின் முன்னால் வெடித்திருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

வெடித்த குண்டின் நிறை 400 கிலோவாக இருக்கலாம் என தூரதர்ஷனும், இருநூறு கிலோவாக இருக்கலாம் என மற்றொரு செய்தி நிறுவனமும் அறிவித்தன.

## வெடிகுண்டு தாங்கிய லொறி வவுனியாவிலிருந்து வந்தது

வெடிகுண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட 42 — 6452 இலக்க லொறி கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியாவிலிருந்து புறப்பட்டு அடுத்த நாள் மாலை கொழும்பை வந்தடைந்தது என்றும்—

அடுத்த நாள் தாக்குதல் இடம்பெறும் வரை ஆட்டுப்பட்டித் தெருவில் அது நிறுத்தப்பட்டிருந்தது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

## கொழும்பு நகர் ஸ்தம்பிதம்

லண்டன், பெப். 2

மத்திய வங்கி குண்டு வெடிப்பையடுத்து கொழும்பு நகர் நேற்று ஸ்தம்பித்து இருந்தது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

வாகனங்கள் ஓடவில்லை; அரச அலுவலகங்கள் இயங்கவில்லை; வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை; வீதிகளில் நடமாட்டம் இருக்கவில்லை; மக்கள் மத்தியில பதற்றம் நிலவியது.

மத்திய வங்கியைச் சூழவுள்ள பல கட்டடங்களில் இருந்த ஜன்னல்கள் உடைந்ததால் வீதிகள் எங்கும் கண்ணாடிச் சிதறல்கள் காணப்பட்டன. மத்திய வங்கிப் பகுதியில் இரத்தம் குளம் போல தேங்கிக் கிடக்கக் காணப்பட்டது. — என்றும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.

(உ-2)

## ஆஸ்பத்திரியில் நெருக்கடி

வெடிகுண்டுச் சம்பவத்தில் காயமுற்ற பல நூற்றுக் கணக்கானோர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 30 வார்ட்டுகளில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

காயமுற்றோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் பெரியாஸ்பத்திரியில் ஆயிரக் கணக்கில் திரண்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைவதற்கு [illegible]டிப்பதால் ஆஸ்பத்திரி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பாதுகாப்பு மேலும் தீவிரம்

மத்தியவங்கி மீதான வெடிகுண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பில் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாக பதில் பொலீஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்க தெரிவித்தார்.

## தாக்குதலும் தீவிரமாகும்

கொழும்புக் குண்டு வெடிப்பை அடுத்து வடக்கு—கிழக்கில் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு நேற்று அறிவித்தது.

## தீயணைக்க 24 மணி நேரம்

குண்டு வெடித்து 24 மணி நேரத்தின் பின்னரே பல கட்டடங்களில் பரவியிருந்த தீ முற்றாக அணைக்கப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## தாக்குதலுக்கு காரணம் யார்?

கொழும்பு, பெப். 2

கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு இன்னொரு குழுவே காரணம் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுவதாகக் கேள்விப்பட்டோம். எனவே தாக்குதல் குறித்து கருத்துக் கூற வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இல்லை.

இவ்வாறு லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திரு. ஜெயதேவன் 'றேடியோ பிரான்ஸ்' வானொலிக்குத் தெரிவித்தார்.

குண்டு வெடிப்புக்குத் தாமே பொறுப்பு என்பதனை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளதாக வெரித்தாஸ், பி. பி. ஸி வானொலிகளும் தெரிவித்தன.

(அ)

## வீடு திரும்பாத ஊழியர் விவரம் கோரப்படுகிறது

கடந்த 31 ஆம் திகதி வேலைக்கு சென்ற மத்திய வங்கி ஊழியர்கள் வீடு திரும்பாது விட்டால் அல்லது அவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்காது விட்டால் அது பற்றி அறிவிக்குமாறு மத்திய வங்கி கேட்டுள்ளது.

(இ-3)

## அமெரிக்க அரசு கண்டனம்

மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவத்தை அமெரிக்கா கண்டித்துள்ளது.

'இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு அமெரிக்க அரசின் ஆதரவு என்றும் உண்டு. இலங்கை அரசு வெளியிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் சட்ட வரைவு இனப்பூசலை ஒழித்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உறுதியான அடித்தளம் என அமெரிக்க அரசு கருதுகின்றது.' — இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் உத்தியோக பூர்வ அறிக்கையை நேற்று வெளியிட்டு உரையாற்றிய போது அத்திணைக்கள அதிகாரி நிக்கலஸ் பேர்ன்ஸ் தெரிவித்தார்.

## கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி மூன்றும் கண்டிக்கின்றன

குண்டு வெடிப்பை மூன்று தமிழ்க் கட்சிகள் கண்டித்துள்ளன.

தமிழ் போராட்டம் என்ற பெயரில் அப்பாவி மக்களை கொல்வதைத் தாம் கண்டிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுக்கு தொடர்ந்து முயற்சி செய்வதுதான் முன்னேறிச் செல்வதற்கான ஒரே வழி என்றும் அவர் கூறினார்.

மானிதாபிமானமற்ற — காட்டு மிராண்டித்தனமான— தாக்குதல் இது என்று ஈ. பி. டி. பி, புளொட் ஆகியன தெரிவித்துள்ளன.

(உ-3)

## ஆஸி, ஸிம்பாப்வே அணிகள் கொழும்புவரா?

கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அங்கு நிலவும் பாதுகாப்பு நிலைமை குறித்து எழுந்துள்ள சந்தேகங்களினால், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றுவதற்காக ஆஸ்திரேலிய, ஸிம்பாப்வே அணிகள் கொழும்பு வருவதை ரத்துச் செய்யக் கூடும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த வாரம் நடைபெறவிருந்த இலங்கை - ஆஸ்திரேலியா போட்டிக்காக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆஸி அணி இலங்கை வரவிருந்தது.

இலங்கைக்கு வருவதா இல்லையா என்பது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கட் சபை அடுத்த திங்கள் முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது அதிகாரி திணறல்

நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மத்திய வங்கி குண்டு வெடிப்புக் குறித்து பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது பதில் பொலீஸ் மா அதிபர் மித்திரா ஆரியசிங்க திணறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரம் மீது இடி விழுந்துள்ளது

மத்திய வங்கி குண்டுவெடிப்பால் நாட்டின் பொருளாதாரத்தின் மீது இடி விழுந்துள்ளது.

பொருளாதாரப் பேராசிரியர் கலாநிதி கருணா சேன கொடித்துவக்கு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ நாட்டின் நிதி மற்றும் பொருளாதாரத்தின் உயிர் நாடியான மத்திய வங்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப் பின் படிப்பு
## கல்வி டிப்புளோமா கற்கை நெறி
## கல்வியாண்டு 1994/95

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

Postgraduate Diploma in Education - Part Time/ Full Time Course for Academic Year 1994/95 University of Jaffna, Sri Lanka.

மேற்படி கற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 08-02-1996 திகதியில் இருந்து 26-02-1996 திகதி வரை வேலை நாள்களில் காலை 10-00 மணியில் இருந்து பிற்பகல் 1-00 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் உப அலுவலகத்தில், அவர்களுக்கு பல்கலைக்கழகத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்து, தம்மைப் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்

31-1-96 (சி/2962)

## யாழ். பரிசுத்த புதுமை மாதா
## ஆலயத் திருவிழா



400 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த யாழ். பரிசுத்த புதுமை மாதா ஆலயத்திருவிழா

எதிர்வரும் 03-02-1996 சனிக்கிழமை காலை 7-00 மணிச்கு சாவகச்சேரி புனித விகோரியார் ஆலயத்தில் கூட்டுப் பலியுடன் ஆரம்பமாகி திருச்சொரூப ஆராதனையுடன் முடிவடையும். அன்னையின் ஆசி பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்று இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

- யாழ். புதுமைமாதா கோவில் இளைஞர்

விளம்பர அன்பளிப்பு:

**P. J.** பர்னாண்டோ
மூக்குக்கண்ணாடி வழங்குபவர்
பல் கட்டுபவர்

கண்டி வீதி, சாவகச்சேரி.
(40048) (தெய்வேந்திரா தியேட்டர் முன்பாக)

## இடம்பெயர்ந்துள்ள மாணவர் கணக்கெடுப்பு

இராணுவ நடவடிக்கையின் விளைவாக வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகக் கோட்டங்களிலிருந்து வடமராட்சி / தென்மராட்சிப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள மாணவர் விவரங்கள் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக அவசியமாகத் தேவைப்படுகின்றன.

இடம்பெயர்ந்து வதியும் கிராம அலுவலர் பிரிவுக்குள் உள்ள ஏதாவது ஒரு பாடசாலையில் மட்டும் பின்வரும் விவரங்களை தவறாது வழங்கும்படி பெற்றோர்களை / பாதுகாவலர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1) கிராம சேவையாளர் பிரிவு:
2) மாணவர் பெயர்:
3) தகப்பன் பெயர்:
4) இறுதியாகப் படித்துக்கொண்டிருந்த பாடசாலை:
5) 1995 இல் படித்த ஆண்டு:
6) 1996 இல் புதிதாக ஆண்டு அனுமதி:
7) சொந்த முகவரி;
8) தற்போதைய முகவரி:
9) பிள்ளையைச் சேர்க்க விரும்பும் பாடசாலை: (முன்னுரிமைப்படி)

மேற்படி விவரங்களை பெப்ரவரி 5, 6, 7 ஆம் திகதிகளில் மு. ப. 9. 00 - 12. 00 மணி வரை அவ்வப் பாடசாலை அதிபரிடம் கையளிக்கவும்.

கல்விப்பணிப்பாளர்கள்
(சி/2963) வலயம் 1, வலயம் 2.

## தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைக் கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற விருக்கின்றது.

இக் கூட்டத்துக்கு சகல பேரவை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார்.

கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக தென்மராட்சிக் கோட்டப் பணிமனையில் தங்களது பெயர்களை பதிவு செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

கிளிநொச்சி செல்வோரை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-3)

## செயற்கை முறை சினைப்படுத்தல்

கிளிநொச்சி, பெப். 02

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்தி பால் உற்பத்தியை பெருக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினர் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் முறையை நாளை ஆரம்பிக்கவுள்ளனர்.

செயற்கைமுறை சினைப் படுத்தல் மூலம் தமது கால்நடைகளைத் தரமுயர்த்த விரும்பும் அனைத்து கால்நடை வளர்ப்போரும் அவ்வப் பகுதி கால்நடை வைத்தியருடன் அல்லது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (இ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

02 — 02 — 1996

இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8.02 — கலை மஞ்சரி— நிகழ்ச்சியில் புதிய பாடல்கள். போராளி சக்தி எழுதிய ''நிமிர்ந்த உள்ளம்'' சிறுகதை மற்றும் கவிதை.
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்.

03 — 02 — 1996

காலை

★ 7.00 — ஆரம்பம்
★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7.10— இன்றைய தாரகை (பாடகர் குமாரசாமி)
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7.45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

சுகயீனம் காரணமாக நேற்று அதிகாலை மந்திகை மருத்துவமனையில் சாவினைத் தழுவிக்கொண்ட கடற்புலி வீரவேங்கை கல்பனாவின் (கமலநாயகி கிருஷ்ணன், இராசவீதி, கோப்பாய்) பெற்றோர் அல்லது உருத்துடையோர், கொடிகாமம் கச்சாய் வீதியில் அமைந்திருக்கும் யாழ். மாவட்ட மகளிர் அமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட மாவீரர் பணிமனையினால் கோரப்பட்டுள்ளது. [இ]

## யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரி

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர், தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென வெளியிட்ட அறிக்கையையிட்டு யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(40046)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னர் சதாசிவம்

அளவெட்டிப் மேற்கு பத்துப்பனையடியை பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சதாசிவம் (அளவெட்டி, மல்லாகம், ப.நோ.கூ.சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) 1-2-96 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் நல்லபிள்ளையின் அன்புக் கணவரும், கந்தசாமி, சித்திவினாயகம் (தபால் நிலையம், அளவெட்டி) நித்தியானந்தன் (ஆசிரியர், அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி), ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாசினி, நிரஞ்சனா, சத்தியபாமா ஆகியோரின் மாமனாரும், கோகுலன், கஜேந்திரன், ஜீவனா, தர்சன், துவாராகா, சிந்துாரன் ஆகியோரின் அன்புப் பேரனும், ச.வீரசிங்கம் அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை வடக்கிலுள்ள தற்காலிக வசிப்பிடத்தில் இன்று (2·2.96) காலை பத்து மணியளாவில் நடைபெற்று மீசாலை வடக்கு சோனகன்காடு மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

தகவல்:
ச.வீரசிங்கம்
(மைத்துனர்)

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (40552)

### திருமதி ஜேசுதாசன் இன்பராணி

இல: 89/2 விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி ஜேசுதாசன் இன்பராணி 1 - 2 - 96 இல் காலமானார்.

இவர் ஜோசப் ஜேசுதாசனின் அன்பு மனைவியும், யூட் நிமால் (ஹொலன்ட்), ஜோன்ஸ் கெனத் (சவூதி), நிக்சன் டொறின்ரன் (கொழும்பு), நியூட்டன், நிரோசன், நிசாந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பேரின்பரெட்னம், மற்றும் மேரி ஜோசப்பின் (இளைப்பாறிய ஆசிரியை, O. L. R.) ஆகியோரின் அன்பு மகளும், ரெட்னராஜா, வசந்தராணி, வத்சலா (ஆசிரியை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), அழகேந்திரன் (இந்தியா), ஜெயசீலன் (ஜேர்மனி), செல்வகுமார் (சவூதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி, சண்முகதேவன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (2 - 2 - 96) பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரெட்னராஜா
(சகோதரன்)
89/2 விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
''கணேசன் ஸ்ரோர்ஸ்''
வாகையடிச் சந்தி,
மட்டுவில் அம்மன் வீதி,
மட்டுவில், சாவகச்சேரி. (40553)


# வடமராட்சியில் உதய சேவை

காலை எழுந்தவுடன் உங்கள் அபிமான நாளிதழ் உதயனை உங்கள் வீட்டிலேயே பெற்றுக் கொள்ளுங்கள்

விவரங்களுக்கு: **உதயன் கிளை நிலையம்**

பழைய பஸ் நிலைய சதுக்கம், பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்புநிதி மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல் 1995, முதற்கட்ட கடன் மீளளிப்பின்போது மீளப் பெறாத மக்களின் நலன் கருதி, தேர்ந்தெடுக் கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப்பெயரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக உதயன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். இப்பட்டியலில் ஒரு பகுதி இன்று பிரசுரமாகிறது.

(நேற்றைய தொடர்ச்சி)

யா/கோ

12 — வயிந்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
21 — இரகுநாதர் குகமூர்த்தி
103 — அப்புப்பிள்ளை சிவபாதம்
149 — செல்லையா தர்மலிங்கம்
261 — இரத்தினம் நல்லையா
423 — கனகேஸ்வரி பத்மநாதன்
493 — மூத்ததம்பி தவரத்தினம்
711 — பூமலர் கணேசன்
838 — செல்லன் திருச்செல்வம்
842 — கோணேஸ்வரி தம்பிப்பிள்ளை
845 — குமரேசு தெய்வேந்திரம்
906 — வேலுப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி
925 — நாகலிங்கம் நாகராசா
1026 — கார்த்திகேசு உதயகுமார்
1053 — கோணேஸ்வரி யோகநாதன்
1126 — கிறேஸ் சோதிநாயகி அருமைநாயகம்
1154 — பொன்னம்பலம் கந்தையா
1158 — குசலகுமாரி ஜீவநாதன்
1302 — விமலேஸ்வரி இராஜராஜேஸ்வரன்
1423 — சின்னத்தம்பி கார்த்திகேசு திருச்செல்வம்
1452 — பாலு திலகராசா
1473 — சிவகுரு வாவதேவன்
1714 — கணபதிப்பிள்ளை இராசலிங்கம்
1742 — தம்பையா சிவபாதசுந்தரன்
1785 — வசந்தாரமணி சச்சிதானந்தம்
1796 — இந்திரவதனா பரமலிங்கம்
1813 — கனகசுந்தரம் கனகலிங்கம்
1864 — பாலேஸ்வரி செல்வராசா
1988 — தியாகராசா பாலசுப்பிரமணியம்
2001 — ஜெகதீஸ்வரி தங்கவடிவேல்
2081 — பரமேஸ்வரி சோதிநாதன்
2084 — ஸ்ரீபதி ஆம்பாள் பொன்னுத்துரை
2101 — இராசரத்தினம் இராசதுரை
2132 — வைத்தி சந்திரசேகரம்
2327 — இராமுப்பிள்ளை கனகசபாரத்தினம்
2412 — சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல்
2437 — கதிரவேலு செல்லத்துரை
2438 — கந்தையா திருநாவுக்கரசு ராசா
2505 — பொன்னர் சரவணை
2579 — திருவிளங்கம் பாலச்சந்திரன்
2605 — தம்பு குணரத்தினம்
2642 — கலாவதி செல்லத்துரை
2670 — நேசமலர் செல்வராசா
2730 — நாகமுத்து இரத்தினம்
2779 — சரவணமுத்து சதாசிவம்
2938 — சர்தேஸ்வரி பரமசாமி
2984 — கதிரேசு செல்லையா
3080 — கந்தையா குழந்தைவேலு
3119 — மேனகா மகேந்திரன்
3153 — பத்மலோஜினி சந்திரபாலன்
3247 — ஜெயவதி செல்லையா
3248 — சாந்தலட்சுமி துரைசிங்கம்
3402 — சின்னத்தம்பி இராசானந்தம்
3625 — இரஞ்சிதமலர் விமலேந்திரன்
3644 — சிவயோகமலர் துரைஐயா
3684 — சின்னத்தம்பி தவநாயகம்
3982 — பொன்னையா தாமோதரன்
4121 — வசந்தரூபி சுந்தரேஸ்வரன்
4164 — கதிர்காமு கந்தையா
4210 — மனோன்மணி வாமதேவன்
4290 — சிவபாக்கியம் தியாகராசா
4296 — கந்தையா சரவணமுத்து
4322 — வல்லிபுரம் ஸ்ரீஸ்கந்தராஜா
4381 — தம்பியையா குலசேகரம்
4428 — சிவராணி பரலோகநாதன்
4433 — தம்பிஐயா சந்திரசேகரம்
4474 — யோகேஸ்வரி கந்தசாமி
4725 — வேலாயுதம் பரிமேலழகபிள்ளை
4826 — சின்னப்பிள்ளை ஆறுமுகம்
4855 — தனலட்சுமி அம்மா இளையதம்பி
4859 — நடராசா திசைவீரசிங்கம்
4958 — தம்பிப்பிள்ளை கந்தையா
4962 — பொன்னு வீரசிங்கம்
4987 — அழகம்மா செல்லத்துரை
5013 — சரஸ்வதி தில்லையம்பலம்
5023 — தவமணி இராஜேஸ்வரன்
5105 — கந்தையா கனகலிங்கம்
5109 — வைத்திலிங்கம் கனகலிங்கம்
5353 — ஆறுமுகம் மாணிக்கராசா
5536 — இராசரத்தினம் புஸ்பநாதன்
5651 — கந்தையா யோகராசா
5764 — கதிர்காமு லோகராசா
5823 — மயில்வாகனம் இராசநாயகம்
5871 — சேனாதிராசா தர்மலிங்கம்
5997 — அன்னம்மா குமாரவேலு
6043 — பராசக்தி மாணிக்கவாசர்
6123 — இராஜேஸ்வரி வினாசித்தம்பி
6161 — சபாபதி சிவபாலன்
6237 — இரத்தினம் பஞ்சரத்தினம்
6330 — சின்னத்துரை இலட்சுமிகாந்தன்
6331 — இராசலட்சுமி பழனித்துரை
6451 — கந்தையா சதாசிவம்

யா/வெ

64 — சுமதி செல்வகுமார்
70 — விஜியரூபி மகேந்திரன்
79 — தம்பிப்பிள்ளை வரதராஜா
162 — கம்சா இரத்தினநாயகம்
260 — சிவசம்பு தங்கராஜா
271 — விசுவநாதர் ஸ்ரீஸ்காந்தா
387 — கந்தையா நடராஜா
470 — நிலாநிதி சிவகடாட்சம்
479 — திரவியம் பாலசிங்கம்
548 — கௌரி சிறிரஞ்சன்
749 — தம்பு தங்கவேல்
802 — சமலேஸ்வரி தவராசா
833 — நவமணி செல்வரத்தினம்
940 — மேரிஅன்ரோனியா பிலமினா வின்சஸ்லோஸ்
969 — செல்லையா இராசரத்தினம்
983 — கவுன்ரஸ் சனகசுந்தரம்
1014 — சுந்தரம் யோகானந்தா
1051 — லிங்கேஸ்வரி குலசிங்கம்
1114 — மகேஸ்வரி விக்னேஸ்வரன்
1125 — தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம்
1209 — நாகரத்தினம் பாலசுப்பிரமணியம்
1378 — சந்திரசேகரம் அருளேஸ்வரன்
1413 — சந்நானலட்சுமி சர்வேஸ்வரன்

யா/ந

0004 — செல்லத்துரை யோசவ் குணரத்தினம்
0040 — நாகரத்தினம் செல்வரத்தினம்
0107 — வேலாயுதர் குணநாயகம்
0190 — பூரணம் இராமன்
0264 — வல்லிபுரம பரமசாமி
0328 — நடராசா கனகசிங்கம்
0330 — நடராசாஐயர் கந்தசாமிஐயர்
0400 — கந்தையா இராமநாதன்
0408 — இராசையா சுப்பிரமணியம்
0445 — ஐயாத்துரை துரைசிங்கம்
0447 — ஆசைப்பிள்ளை துரைராசா
0484 — நாகலிங்கம் கனகரத்தினம்
0578 — சபாபதிப்பிள்ளை கனகரத்தினம்
0604 — சறோஜினிதேவி பொன்னுத்துரை
0609 — பூபதி செல்வராசா
0625 — கார்த்திகேசு சிவசுப்பிரமணியம்
0649 — காசிநாதர் வர்ணகுலசிங்கம்
0659 — செல்லப்பா அமிர்தலிங்கம்
0661 — பராசக்தி பாலச்சந்திரன்
0707 — நாகமுத்து குணரத்தினம்
0796 — சபாபதிப்பிள்ளை இராசரெத்தினம்
0824 — நடராசா சுந்தரம்பிள்ளை
0862 — துரைச்சாமி சீனிவாசகம்
0887 — யோகரஞ்சினி தனநிரூபசிங்கம்
0890 — கனகரட்ணம் தனபாலசிங்கம்
0896 — முருகேசு விஜயரட்ணம்
0941 — கணேசசிவசண்முகசர்மா கிருஸ்ணராஜா
0957 — பொன்னுத்துரை கந்தசாமி
1058 — சரவணமுத்து சிவநேசன்
1207 — முருகேசு நடராசா
1260 — சிவப்பிரகாசம் சிவராமலிங்கம்
1302 — சின்னையா வீரகத்திப்பிள்ளை
1307 — அருளம்மா ஞானப்பிரகாசம்
1313 — சின்னத்துரை குகமூர்த்தி
1360 — சுப்பையாமுதலி தங்கவேல்முதலி
1382 — தம்பையா நாகலிங்கம்
1421 — பொன்னுத்துரை சண்முகநாதன்
1472 — சதாசிவஐயர் சிவகுமாரசர்மா
1488 — சின்னையா விஸ்வநாதன்
1510 — கந்தையா கண்ணுத்துரை
1555 — வீரசிங்கம் யோகரத்தினம்
1643 — பொன்னம்மா இராசையா
1647 — வைத்தியலிங்கம் சிவசம்பு பத்மநாதன்
1777 — இராசையா கனகராசா
1789 — நாகேஸ்வரி திருநாவுக்கரசு
1867 — இந்திராதேவி கனகசபை
1938 — நாகமணி மயில்வாகனம்
1954 — நாகேஸ்வரி சண்முகராஜா
2012 — ஜெயலட்சுமி இராஜேந்திரா
2120 — கணபதிப்பிள்ளை சின்னையா ஆறுமுகம்
2174 — கந்தசாமி கோபாலகிருஸ்ணன்
2215 — பொன்னையா நடராசா
2315 — நடராசா சற்குணலிங்கம்
2368 — செல்லையா தம்பித்துரை
2369 — யோகரத்தினம் துரைசிங்கம்
2409 — கதிர்காமதேவி சுப்பிரமணியம்
2494 — காலிங்கர் நடராஜா
2498 — சின்னத்துரை நடராசா
2563 — நாகரத்தினம் அம்பிகைபாகன்
2674 — விசுவலிங்கம் இரத்தினசபாபதி
2764 — சுப்பிரமணியம் தேவராசா
2873 — செல்லையா நடராசா
2937 — கந்தையா இராசேந்திரம்
3086 — கிறகோறி யேசுராஜன்
3111 — கனகம்மா சோமசுந்தரம்
3115 — செல்லையா கந்தசாமி
3133 — மகேந்திராணி இராஜரட்ணம்
3203 — சின்னையா பத்மநாதன்
3217 — இராஜலட்சுமி ஆறுமுகம்
3220 — செல்லத்துரை இந்திரகுமார்
3299 — விமலாதேவி சிவசுப்பிரமணியம்
3362 — மாணிக்கம் துரையப்பா
3400 — நாகமுத்து நமச்சிவாய இடைக்காடர்
3464 — மாணிக்கம் இராசலிங்கம்
3481 — வல்லிபுரம் நடராசா
3589 — அன்றவசந்தநிதி பிறிறஸ்
சந்திரகுமார் [illegible]
3660 — கந்தையா சுப்பிரமணியம்
3698 — கந்தையா பத்மலிங்கம்
3798 — இராசையா பாலசிங்கம்
3807 — சின்னத்துரை மாதவகுமாரன்
3815 — சொர்ணபாக்கியம் சபாரத்தினம்
3823 — செல்வராசலிங்கம் பாலச்சந்திரன்
3828 — அம்பலவாணி கந்தையா
3835 — கௌசலாதேவி சந்திரசேகரம்
3837 — சின்னத்தம்பி நடராசா
3857 — சசிலேகா சின்னத்தம்பி.
3869 — உமாமகேஸ்வரி வேலாயுதம்.
3886 — கந்தையா சோமசுந்தரம்.
4018 — ஜெயலட்சுமி சண்முகநாதன்.
4190 — விஜயலட்சுமி செல்வராஜா.
4280 — செல்லம்மா வேலாயுதம்
4308 — சசிதேவி சௌபாக்கியகுமாரசர்மா.
4381 — புவனம் செல்வநாயகம்.
4475 — கந்தர் சின்னத்துரை ஜெயப்பிரகாசம்.
4507 — ரதி சந்திரநாதன்.
4556 — வைத்திலிங்கம் சிவனேசன்.
4558 — குணரத்தினம் கணேசலிங்கம்.
4581 — நிர்மலா பாலசுந்தரம்.
4625 — நாகரெட்ணம் பத்மநாதன்.
4638 — தர்மலிங்கம் பரராசசிங்கம்.
4652 — நரசிங்கம் சிவன்.
4849 — நித்தியபாக்கியம் கோவிந்தபிள்ளை.
4956 — ஜெகசீதா இரத்தினம்.
5010 — திருஞானசம்பந்தன் நாகலிங்கம்.
5055 — பத்மாவதி செல்வநாயகம்.
5077 — இராசமணி இராசலிங்கம்,
5108 — வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
5122 — இந்திராணி செல்வரத்தினம்.
5141 — சோமசுந்தரம் யோகதாசன்.
5178 — பொன்னர் தம்பிஐயா.
5199 — சரவணமுத்து சண்முகநாதன்.
5232 — மகாராணி கனகலிங்கம்.
5244 — கிருபா இராமநாதன்.
5250 — பாக்கியலட்சுமி லோகேஸ்வரன்.
5286 — பூபதி இரத்தினம்.
5302 — கனகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
5334 — கணபதிப்பிள்ளை சிவகுமாரன்
5385 — சகுந்தலா இரகுநாதன்
5429 — கனகரத்தினம் சந்திரரத்தினம்
5436 — சின்னத்துரை இராசரெத்தினம்
5455 — கந்தையா செல்வராஜா
5458 — சுந்தரம் குணராஜா
5468 தியாகராசா நவநீதன்
5484 — செல்லத்துரை விவேகானந்தா
5493 — கௌசல்யாதேவி சுந்தரலிங்கம்
5589 — யோகமணி நடராசா
5600 — செல்வராணி மகாலிங்கம்
5646 — கமலாவதி செல்வரத்தினம்
5649 — சிவசம்பு கணேசன்
5670 — தவமணி கமலராசா
5700 — முருகேசு சுந்தரலிங்கம்
5753 — வசந்தகுமாரி தம்பையா
5852 — பேதுறுயோன் இமானுவேல் றொசாய்றோ
5883 — வரதராஜா ரஞ்சன்
5951 — யோகம்மா கந்தையா
5960 — மாணிக்கம் ஐயன்னா
5962 — திலகேஸ்வரி அருளம்பலம்
6009 — சந்தானலெட்சுமி சோமசுந்தரம்

யா/வெ

0027 — மங்கையர்க்கரசி இரட்ணசிங்கம்
0071 — புவனேஸ்வரி ஞானலிங்கம்
0073 — வடிவாம்பிகை கணேசன்
0111 — சாந்தினி கணேசசுந்தரம்
0113 — தருமராணி சிற்சபேசன்
0108 — ஜேம்ஸ் பிலிப்ஸ்
0148 — தெய்வேந்திரன் ரவீந்திரன்
0176 — சுப்பிரமணியம் இரத்தினம்
0179 — ஸ்ரீரஜனி பரமானந்தம்
0181 — கனகசபை மோகனேஸ்வரன்
0189 — சிறிரஞ்சினி குமாரகுலசிங்கம்
0202 — விஸ்வலிங்கம் பஞ்சலிங்கம்
0208 — நவரத்தினம் சுந்தரலிங்கம்
0212 — தம்பு சண்முகராசா
0213 — ஜெயராணி இராமலிங்கம்
0214 — பாலசவுந்தரி சின்னத்தம்பி
0221 — பிறேமளா பாலசுப்பிரமணியம்
0232 — கலைமகள் குமாரலிங்கம்
0234 — பொன்னம்பலம் முத்துக்குமாரு
0243 — பெருமாள்பிள்ளை சேதுராமன்
0262 — நிர்மலா சின்னத்துரை
0272 — மாணிக்கம் சபேசன்
0297 — கனகம்மா மழவராயமுதலி
0306 — ஜெகசொரூபி தர்மலிங்கம்
0336 — பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்
0347 — இராசம்மா கணேசன்
0366 — கலாநாயகி பாலகிருஷ்ணன்
0377 — சிவக்கொழுந்து நடராசா
0393 — வினாசித்தம்பி ஜெயராசா
0419 — இந்திராணி சுந்தரலிங்கம்
0441 — சிவனேஸ்வரி மதியாபரணம்
0447 — சிவராசா சித்திராங்கதன்

★ தமிழீழ மீட்பு நிதி மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் விவரங்கள் வெளிவந்த 1 – 02 – 1996 உதயனில் யா/வெ 493 – முருகேசு தவராஜா என்பதற்குப் பதிலாக தவறுதலாக முருகேசு தேவராஜா என அறிவிக்கப்பட்டு விட்டதாக நிதித்துறை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:பட்டு, நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஒழுங்கை, அரசடிச் சந்தி, நெல்லியடி. (40111)

நல்ல நிலையிலுள்ள C 90 சுப்பர் கப் (மக்னட்மொடல்) மோட்டார் சைக்கிளும், நல்ல நிலையிலுள்ள ஆண்களுக்கான சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சங்கர், மே/பா. A செல்லத்துரை, (வட்டக்கச்சி ம. வி. ஆசிரியர்), H. L. No. 730 சிவிக் சென்ரர், வட்டக்கச்சி. (40278)

### O/L தபால் மூலம்

உங்கள் வினாக்களுக்கு B.Sc(Cey) ஆசிரியரால் துரிதமாக விடைகள் அளிக்கப்படும். கடந்த O/L 95 கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம். கடிதத் தொடர்பு:- ஆசிரியர், Medi Aids Clinic, கண்டிவீதி, சாவகச்சேரி. (40045)

# இடம்பெயர்ந்தோர் பங்கீட்டு அட்டை 5 ஆம் திகதி கிளிநொச்சியில் மீளாய்வு

கிளிநொச்சி, பெப். 2

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வந்துள்ளவர்களின் பங்கீட்டு அட்டைகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் மீளாய்வு செய்யப்படவிருப்பதாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் திரு. எஸ். இராசநாயகம் தெரிவித்தார்.

கிராமசேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும். இந்த மீளாய்வு வேலைகள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தோர்தொடர் பாகஎடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களில் குறைபாடு இருப்பதாக தெரிவித்துள்ளதையடுத்தே இந்த மீளாய்வு செய்யப்படவிருக்கிறது. (இ-3-123)

## மூவர் மரணம்

காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட மூவர் நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமானார்கள்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கதிரன் சின்னப்பிள்ளை (வயது 52), சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த அ. மங்களேஸ்வரி (வயது 40), சாவகச்சேரி கச்சாய் வீதி, வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த நாகேந்திரன் ஜீவரஜீ (வயது 1) ஆகியோரே மரணமானவர்களாவார். (இ-117)

## கிளிநொச்சியில் அம்புலன்ஸ் பற்றாக்குறை நீங்கும்

கிளிநெர்ச்சி, பெப். 2

கிளிநொச்சி வைத்தியசாலையில் தற்பொழுது நிலவும் அன்புலன்ஸ் பற்றாக்குறையை நீக்குவதற்கு கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சிவகுரு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக கெழும்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் தாம் கலந்துரையாடியதாகவும்-

புதிய அம்புலன்ஸ் வாகனம் ஒன்றைத் தருவிப்பதற்கு கொள்கையளவில் அவர்கள் இணங்கியுள்ளதாகவும்- டாக்டர் சிவகுரு மேலும் தெரிவித்தார். (இ-123)

## மூளைக் காய்ச்சலுக்கு இரு சிறுமிகள் பலி

தருமபுரம் மகாவித்தியாலய முகாமில் மூளைக்காய்ச்சலுக்கு இலக்காகி இரு சிறுமிகள் இறந்துள்ளனர் என புளியம் பொக்கனை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து இந்த முகாமில் தங்கியிருந்த கந்தன் கார்த்திகா (3 வயது), மார்க்கண்டு யசோதா (8 வயது) ஆகிய சிறுமிகளே இறந்தவர்கள் என்று புளியம் பொக்கனை சுகாதாரப்பிரிவு அலுவலர் திரு. க. இளங்கோ தெரிவித்தார். (இ-3)

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி

## புலமைப் பரிசில்- 1996

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கல்வியைத் தொடர முடியாத ஆண்டு 6 இல் உள்ள பெற்றோர்களை இழந்த/ பின்தங்கிய பிள்ளைகளுக்கு தூயஅன்னை ஸ்ரீசாரதாதேவி புலமைப் பரிசில் வழங்க விரும்புகிறது. **20- 02- 96** க்கு முன் பெயர் விலாசம், பெற்றோரின் நிலை உட்பட்ட முழுவிரவங்களையும் தெளிவாக எழுதிக் கீழ்காணும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை

(சி/3196)

## உளவியல் மருத்துவ நிபுணர் கிளிநொச்சி வருவார்

சீனா, கம்போடியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் யுத்த சூழலில் பணிபுரிந்து அனுபவம் பெற்ற உளவியல் மருத்துவ நிபுணர் டாக்டர் டேவிற் ரட்ணவேல் கிளிநொச்சிக்கு விரைவில் வருகை தரவுள்ளார்.

இதனால் —

யாழ்ப்பாணம் சாந்தியகத்தில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் உளவளத்துறையில் பயிற்சி பெற்று இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலயங்களுக்குச் சென்று பணிபுரிய விரும்புவோரை —

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ)

## ம. எண்ணெய் பரல்களுடன் மாஹோ

சாவகச்சேரி, ஒக் 2

யாழ். குடா நாட்டு மக்களுக்கான 2 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெய் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''மாஹோ'' கப்பல் வார இறுதியில் பருத்தித் துறைக்கு வரவிருக்கிறது.

இக் கப்பலில் ப. நோ. கூ. சங்கங்களுக்கான ஒரு தொகுதி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன.

கொழும்பு திரும்பியுள்ள ''லங்கா கல்யாணி'' கப்பலில் நிவாரணப் பொருள் ஏற்றும் வேலை ஆரம்பமாகியுள்ளது. (இ-3)

## புகைப்பட வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி

கோண்டாவில் கிழக்கில் இயங்கிவந்த எமது படப்பிடிப்பு நிலையம் ''கங்கா போட்டோ''

**02 — 02 — 96** முதல் மீசாலை வடக்கில், கண்டி வீதியில், புத்தூர்ச் சந்தியில் இயங்கவிருப்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

கங்கா போட்டோ,
புத்தூர்ச் சந்தி,
கண்டி வீதி,
மீசாலை வடக்கு.

உரிமையாளர்,
பொ. கங்காதரம்பிள்ளை.

(40041)

## வன்னிக்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் ஜனவரி மாத சம்பளக் கொடுப்பனவு

சாவகச்சேரி, பெப். 2

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கான ஜனவரி மாத முழுச் சம்பளக் கொடுப்பனவு அடுத்த வாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்து அங்கு தங்கியுள்ள பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும்—

அவர்களுக்கான சம்பளக் காசோலைகள் மாற்றப்பட்டு வன்னியில் வைத்து பணமாக அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து அங்கு தங்கியுள்ள கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் அங்கு வைத்தே சம்பளம் வழங்கப்படும். (உ-3)

## பொதுமக்கள் தகவல் பெற அலுவலகம்

கொழும்பு, பெப். 2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன் வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் சட்ட ஆவணம் குறித்து பொதுமக்ளுக்கு தகவல்களை வழங்குவதற்காக கொழும்பு ஹல்ஸ்டோப்பில் உள்ள நீதி, அரசமைப்பு விவகார அமைச்சில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. (இ-7)

ஈழத்தின் தமிழ் நாடக வரலாற்றில் மறக்கமுடியாத கலைஞர்
நாடகக்கவிமணி

## எம். வீ. கிருஷ்ணாழ்வார்

அவர்களின்

## நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு

கரவெட்டி (நெல்லியடி) எம். வீ. கிருஷ்ணாழ்வார் நினைவுமலர் ஒன்றினை வெளியிடுவதற்கான முயற்சி மேற் கொள்ளப்படுகின்றது. இக் கலைஞருடன் தொடர்புடைய கலைஞர்கள், இவரைப் பற்றிய தகவல்கள் அறிந்து வைத்திருக்கும் அறிஞர்கள், அபிமானிகள், முதலியோரிடமிருந்து அவர் பற்றிய விவரங்களை அறிய விரும்புகின்றோம்.

இந்த நல்ல பணிக்கு உதவும்படி தொடர்புடையோரை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மு. கந்தசாமி (செயலாளர்)
எம். வீ. கிருஷ்ணாழ்வார்
நூற்றாண்டுவிழா நினைவுச் சபை
C/o வே. ஆறுமுகம்,
'மணிவாசா' கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(40551)

## பூநகரி செயலர் பிரிவில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

### நாளை நடைபெறும்

பூநகரி, பெப். 2

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ளவர்களுக்கு பங்கீட்டு அட்டை மீளாய்வு செய்யும் வேலைகள் நாளை சனிக்கிழமை நடைபெறவிருப்பதாக பிரதேச செயலர் திரு. இரா. இரவீந்திரன் தெரிவித்தார்.

நாளை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த மீளாய்வுக்கு வருபவர்கள் குடும்ப அட்டை, பங்கீட்டு அட்டைகள் (பழைய, புதிய), அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்படவிருக்கும் கிராமசேவையார் பிரிவும், நடைபெறும் இடங்களும் வருமாறு;

★ முழங்காவில் — முழங்காவில் கி. அ. ச. மண்டபம்.
★ நாச்சிக்குடா — நாச்சிக்குடா கி. சே. அலுவலகம்.
★ கரியாலைநாகபடுவான் — கரியாலை நாகபடுவான் அ. த. க. பாடசாலை.
★ குமுழமுனை — குமுழமுனை பாடசாலை.
★ பல்லவராயன்கட்டு — கரியாலை நாகபடுவான் இல. III பாடசாலை.
★ ஜெயபுரம் தெற்கு— கியூடெக் தேவாலயம்.
★ ஜெயபுரம் வடக்கு— பூநகரி மகாவித்தியாலயம்.
★ கிராஞ்சி — கிராஞ்சி கி. சே. அலுவலகம்.
★ பொன்னாவெளி — வலைப்பாடு பாடசாலை.
★ பள்ளிக்குடா — செம்பியன்பற்று பாடசாலை.
★ கொல்ல குறிச்சி — தம்பிராய் பாடசாலை.
★ ஆலங்கேணி — ஆலங்கேணி கி. அ. அலுவலகம்.
★ நல்லூர் — நல்லூர் பாடசாலை. (இ-3-133)

## அறிவிக்கவும்

திரு. S. சண்முகசுந்தரம் (சோப்பாய் இராச வீதி,- மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக இருந்தவர்கள்)

தற்போது இருக்கும் விலாசத்தை அறிவிக்கவும்—

வ. அரியரத்தினம்
P. D. R. O
ஜெயபுரம், பூநகரி.

(சி/3197)

சுப முகூர்த்த பட்டுப் புடைவைகளை எண்ணம்போல் தெரிவு செய்ய

யாழ். சிவகணேசன் பட்டுச் சோலை

இல. 03, நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (சி/2959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உணர வேண்டிய காலம் இது

ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பு முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவுக்குப் பயங்கரமானது. நாட்டின் மிகப் பிரதானமான பொருளாதார மையமான மத்திய வங்கி மீதான இந்தத் தாக்குதல் பல துறைகளிலும் பாரிய பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆனால் அதனை மறைக்கும் விதத்தில்அரசாங்கம் பிரசாரம் செய்ய முனைகிறது. இந்தப் பெரிய தாக்குதல் நடந்த மத்திய வங்கியில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள், நாணயங்கள் உட்பட்ட உடைமைகளுக்கு எந்த விக சேதமும் ஏற்படவில்லை என்ற தோரணையில் பிரசாரம் நடத்தப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜெயவர்த்தனா ரூபவாஹினியில தோன்றி நாணயங்கள், ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் முக்கிய வங்கி ஆவணங்கள் சேதமின்றி இருப்பதாக அறிவித்தார். வர்த்தக வங்கிகளுடன் ஆற்ற வேண்டிய பணியில் எவ்வித தடங்கலும் ஏற்படாது என்றார்.

வெடிகுண்டுத் தாக்குதல் நடந்து அதில் இறந்தவர்களின் சடலங்கள் முற்றாக அகற்றப்படவில்லை; சிக்குண்டவர்கள் எல்லோரும் மீட்கப்படவில்லை; தீ முற்றாக அணைக்கப்படவில்லை: அதற்கு முன்னரே ஆளுநர் எல்லாமே பாதுகாப்பாக இருப்பதாக அறிவித்தார்.

இத்தகைய பிரசாரத்துக்குக் காரணம் இல்லாமல் இல்லை. குண்டு வெடிப்பினால் வெளிநாட்டு மூலதனமிடுவோர், உல்லாசப் பயணிகள் மற்றும் வெளியக நிறுவனத்தினர் கொழும்பில் மூலதனமிடுவதற்கும், அங்கு வருவதற்கும் பின்னடிப்பார்கள். எல்லாம் நல்லாகவே உள்ளன பிரசாரம் அதனைத் தடுப்பதற்காகவே.

மேலும் இத்தகைய குண்டு வெடிப்புகள் நடைபெறும் என்பதனை பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்த்தே இருந்தன.

இத்தகைய குண்டுவெடிப்புகளைத் தடுப்பதற்காக கொழும்பு நகரில் பாதுகாப்புத் தீவிரமாக்கப்பட்டுள்ளதாகவும், சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த குண்டு வெடிப்புகளில் ஒன்று நடந்துவிட்டது!

இதன் அர்த்தம் என்ன? இத்தனை வசதிகள் வளங்களுடனும் இருந்தும் தலைநகரை அரச படைகளால் பாதுகாக்க முடியவில்லை என்பதே ஆகும். அரச உடைமைகளையும் சிங்கள மக்களையும் பாதுகாக்கக் கூடிய ஆற்றலும் சக்தியும் படைகளுக்கு இல்லை என்பதும் ஆகும்.

அரசாங்கப் படைகள் தங்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக தம்மை அழிப்பவை என்பதனைத் தமிழர்கள் உணர்ந்து மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது.

அதேபோல, அரசாங்கப் படைகளால் தங்களைக் காப்பாற்ற முடியாது என்பதனைச் சிங்கள மக்களும் இந்தக் கட்டத்திலாவது உணர்வது அவசியம்.

சிங்கள மக்கள் இதனை உணர்ந்தால் நாட்டின் இப்போதைய அரசியல் சூழ்நிலையில் பெரும் மாற்றங்கள் உருவாக வாய்ப்புண்டு.

# யாழ். மாவட்ட புனர்வாழ்வுப் பணி: நிதி ஒதுக்கீடு செய்வதில் இழுத்தடிப்பு

கொழும்பு, பெப். 2

வலிகாமத்தில் இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ளவர்களின் புனர்வாழ்வுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடுகளை வழங்கிய புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் யாழ். மாவட்ட புனர்வாழ்வுப் பணிக்கான நிதி ஒதுக்கீட்டை ஒத்தி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சில் நடந்த கூட்டத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்ட அரச அதிபர்கள் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியில் தற்காலிக கொட்டகைகள் அமைக்க 30 லட்சம் ரூபாவும்—

முல்லைத்தீவில் தற்காலிக கொட்டகைகள் அமைக்க 200 லட்சம் ரூபாவும்—

மன்னாரில் தஞ்சமடைந்துள்ள யாழ். அகதிகளின் நலன்களை கவனிக்க 30 லட்சம் ரூபாவும் — அமைச்சர் அஷ்ரப்பால் ஒதுக்கப்பட்டன.

வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் 63 பாடசாலைகளில் 3 ஆயிரத்து 300 குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர் என்றும் —

அவர்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்க நிதி வழங்க வேண்டும் என்றும் — யாழ் அரச அதிபர் கோரினார்.

யாழ். மாவட்ட அகதிகளுக்காக ஒதுக்கப்படும் தொகை அடுத்த சில தினங்களுக்குள் நிர்ணயிக்கப்படும் என்று அப்பொழுது தெரிவிக்கப்பட்டது. (இ–3)

## ஹபரண இன்று வருகிறது

திருகோணமலையில் இருந்து ஆயிரம் மெற்றிக்தொன் மாவுடன் 'ஹபரண' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என தெரிவிக்கப்பட்டது.

அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களுக்கான நிவாரணப் பொருள்களும் சுகாதாரத் திணைக்களத்துக்கான எரிபொருள்களும் இக்கப்பலில் எடுத்துவரப்படுகின்றன.

இக் கப்பலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளும், மற்றும் சில தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் வருகிறார்கள். (இ-3-173)

## வயிற்றோட்ட நோய் மீண்டும் பரவும் ஆபத்து

### ஒரே நாளில் 3குழந்தைகள் அனுமதி

மந்திகை, பெப். 2

வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது மந்திகை அரசினர் வைத்திய சாலைப் பதிவேடுகளில் இருந்து தெரியவருகிறது.

நேற்று முன்தினம் வயிற்றோட்டம் காரணமாக மூன்று குழந்தைகள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அநேகமாக இந்நோய் குழந்தைகளையே பீடித்து வருகிறது.

மீசாலையைச்சேர்ந்த சிவசம்பு சிவரஞ்சன் (வயது1) சாவகச்சேரியைச்சேர்ந்த சண்முகலிங்கம் சயந்தன் (வயது 3 மாதம்) மறுவன் புலோவைச் சேர்ந்த செல்லத்துரை அனுஷா (வயது 6 மாதம்) ஆகியோரே இம்மூவரும் ஆவர்.

இம்மூவருடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் 8 குழந்தைகள் தற்போது சிகிச்சைபெற்று வருகின்றன. (இ-15)

## உணவை மூடி வைத்து விற்குமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி, பெப். 2

உணவகங்கல் மற்றும் பொது இடங்களில் உணவுப் பொருட்களை மூடி வைத்து விற்பனை செய்து நோய் பரவாமல் தடுக்க உதவுமாறு குடி தண்ணீர், சுற்றுப்புறச் சூழல் சுகாதார செயலணி இணைப்பு அதிகாரி திரு. வி. பி. பாலசிங்கம் கேட்டுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் நோய்கள் பரவ இடமளிக்கக் கூடாது என்றும் —

உணவகங்கள் மற்றும் பொது இடங்களின் உணவுப் பொருள்களை திறந்து வைக்காமல் மூடி வைத்து விற்பதன் மூலம் இந்த நிலையை தவிர்க்கலாம என்றும்—

சமுதாயத்தின் நலன் கருதி உணவக உரிமையாளர்கள் இந்தவிடயத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தாம் கருதுவதாகவும்— அவர் தெரிவித்துள்ளார்.

## நூல் வெளியீடு

அருட்கவி சி. விநாசித்தம்பியால் பாடப்பெற்ற ''ஸ்ரீநாராயணர் திருவந்தாதி'' என்னும் நூல் வெளியீடு எதிர்வரும் ஞாயிறு மாலை 3 மணிக்கு சாவகச்சேரி வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. க. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் சிறப்புரைகளை சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர், திரு. ஆறுதிருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர்.

அத்துடன் ''ஸ்ரீநாராயணர் கவசம்'' மற்றும் ''ஸ்ரீ மனோன்மணி கவசம்'' ஆகிய நூல்களின் அறிமுகமும் இடம் பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ–51)

# போலி சுகாதாரப் பரிசோதகர்கள் சாவகச்சேரிப் பகுதியில் நடமாட்டம்

### எச்சரிக்கிறார் சுகாதார வைத்திய அதிகாரி

வடமராட்சி, பெப். 2

போலி சுகாதாரப் பரிசோதகர்கள் சாவகச்சேரிப் பகுதியில் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் சுகாதாரப் பரிசோதகர்கள் என்று கூறிக்கொண்டு வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் இவர்கள், பொருள்களை அபகரித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

இப்படியானவர்கள் குறித்து வர்த்தகர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் —

உணவுப் பண்டங்களைப் பரிசோதனை செய்ய வருபவர்களின் அடையாள அட்டையைப் பார்வையிடுமாறும் — சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க. த. சிவபாதம் அறிவித்துள்ளார். (இ–117)

## வெளிச்சம் இன்றி வந்த வண்டில் - வான் மோதல்

சாவகச்சேரி, பெப் 2

மாட்டு வண்டி ஒன்றும் வேகமாகவந்த மினிவான் ஒன்றும் எதிரெதிரே மோதிக்கொண்ட சம்பவம் செவ்வாயன்று அதிகாலை 1.30 மணி அளவில் உசன் சந்தியில் இடம் பெற்றது.

இந்த விபத்தின் போது வண்டில் மாடுகளில் ஒன்று கொல்லப்பட்டது. மற்றைய மாடு காயமடைந்தது.

வண்டியில் இருந்த சரசாலையைச் சேர்ந்த இ. மகேந்திரன் [வயது36] ,மறவன்புலோவைச் சேர்ந்த எஸ். இரத்தினசிங்கம் (வயது44) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

மினிவான்வெளிச்சம்இல்லாமலும் வண்டில் விளக்கு இல்லாமலும் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து நிகழ்ந்த சமயம் மாட்டு வண்டில் மட்டை ஏற்றுவதற்காக எழுதுமட்டுவாள் சென்று கொண்டிருந்தது. (இ-31-117-13)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பாம்புக்கடி ஊசி இல்லை

### பாதிக்கப்பட்டோர் மந்திகைக்கு

தென்மராட்சி, பெப். 2

பாம்பினால் கடியுண்ட இருவர் நேற்று முன் தினம் சாவகச்சேரி ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பாம்புக் கடிக்கு மருந்து இல்லாததே இதற்குக் காரணம் ஆகும்.

கைதடி மத்தியைச் சேர்ந்த பி. ஆனந்தராசா (வயது 22) மீசாலை வடக்கைச் சேர்ந்த ரி. அரசரத்தினம் (வயது 45) ஆகியோரே பாம்பினால் கடியுண்டவர்கள் ஆவர்—

அதே சமயம் புலோலி புற்றறையை சேர்ந்த செல்லையா சின்னத்தம்பி (வயது 60) வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து மிரு[illegible] வசித்து வரும் ஜேபநேசன் மதியழகன் (வயது 16) ஆகியோரும் பாம்பினால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது

கடந்த 28 ஆம் திகதியும் தென்மராட்சிப் பகுதியில் மூன்று பெண்கள் பாம்பினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

கொடிகாமத்தைச் சேர்ந்த தி. யோகேஸ்வரி (வயது40) மிருசுவில் விடத்தற் பளையைச் சேர்ந்த கே. ஜசிந்தா (வயது14), சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த தன[illegible] ஆகியோரே இம் மூவரும் ஆவர். (இ-117-173-13)

## இராணுவத் தொண்டர் படைக்கு ஆள் சேர்ப்பு

### 5 ஆம் வகுப்பு சித்தி போதும்

கொழும்பு, பெப். 2

இராணுவத் தொண்டர் படைக்கு புதியவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

பத்திரமுல்ல, பெலத்தை, குருநாகல், கண்டி, மாத்தறை, அனுராதபுரம், ஹொரவப்பொத்தானை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களிலும், விகாரைகளிலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவும் — 5 ஆம் வகுப்பில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் —அறிவிக்கப்படுகிறது. (இ–3)

## ஏறாவூரில் படையினர் கெடுபிடி

சாவகச்சேரி, பெப். 2

ஏறாவூரில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் 3 தமிழ் இளைஞர்களைப் பிடித்துச் சென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஏறாவூர் ஆற்றங்கரையில் ஒரு இளைஞனும் ஏறாவூர் குடியிருப்பில் இரு இளைஞர்களும் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

ஏறாவூர் நகரில் சோதனை முகாம் ஒன்றை அமைத்துள்ள படையினர் தமிழ் மக்கள் மீது கொடுபிடிகளை மேற்கொண்டு வருவதாகவும்—

இதனால் அச்சமடைந்துள்ள தமிழ் மக்கள் ஏறாவூர் நகருக்குள் செல்வதைக் குறைத்துக் கொண்டுள்ளதாவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## நினைவு பேருரை

சாவகச்சேரி, செப். 2

தசாவதானி சரவணமுத்து - ஆறுமுகத்தின் நினைவுப் பேருரை இன்று வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் 'சுகம் என்பதன் அர்த்தங்கள்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செ. சிவஞான சுந்தரம் (நந்தி) பேருரை நிகழ்துவார். (இ–31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவெடிப்பு எமக்கு நல்ல பாடம் இனி புத்தியுடன் செயற்படுவோம்

## சந்திரிகா நாட்டு மக்களுக்குச் செய்தி

கொழும்பு, பெப். 2

பயங்கரவாதத்திலிருந்து ஸ்ரீலங்கா மக்களைப் பாதுகாப்பதற்கு பயங்கரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் எமக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது. இனிமேல் நாம் அமைதியாகவும், புத்திக் கூர்மையுடனும் செயற்படுவோம்.

நேற்று முன்தினம் கொழும்பு மத்திய வங்கியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் கண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் இவ்வேளையில் கொழும்பு நகரில் மீண்டும் நாசமேற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சோக நிகழ்வால் பாதிக்கப்பட்டுள்ள அமைதியை விரும்பும் இந்நாட்டு மக்களின் துன்பத்தில் நானும் பங்கு கொள்ளுகிறேன்.

தலைநகரில் இவ்வாறான செயல் மேற்கொள்ளப் பட்டது இது முதற்தடவையல்ல.

1986ஆம் ஆண்டு அதிகளவு சேதத்தை ஏற்படுத்திய 12 குண்டு வெடிப்புகள் சிலமாத இடைவெளிக்குள் இடம்பெற்றன.

மத்திய தொலைத் தொடர்பு நிலையத்தில் ஆரம்பித்து புறக்கோட்டை பஸ் நிலையம், கட்டுநாயக்கா விமான நிலையம் போன்ற முக்கிய இடங்களில் இக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இனக் கலவரத்தைத் தூண்டுவதும், பொருளாதார நிலைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளுவதும் தான் இதன் நோக்கம்போல் தெரிகிறது.

இப்படி ஜனாதிபதி கூறினார். [இ-7-10[

## பொருளாதாரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ இக்குண்டு வெடிப்பால் கட்டடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் மட்டும் ஐநூறு கோடி ரூபாவாகும். ஏற்கனவே யுத்தத்துக்கு 3 ஆயிரத்து 800 கோடி ரூபா செலவிட முடியாது திணறும் அரசினால் கட்டடங்களை புதிதாக அமைப்பது கஷ்டம்.

★ வங்கியின் நோட்டுக்கள் மற்றும் தங்கச் சேமிப்பு ஆகியன நிலவறைகளிலேயே வைக்கப்பட்டிருப்பது வழக்கம். நோட்டுகள் அழியவில்லை என்று தெரிவிக்கப் பட்டாலும் அவை வெப்பத்தினால் ஒன்றுடன் ஒன்று ஒட்டி பயன்படுத்த முடியாதவையாகி இருக்கும். அதனால் நாட்டில் விரைவில் பணத்தாளுக்கு தட்டுப்பாடு வரலாம்.

## வலிகாமத்தில் திருடப்பட்ட கால்நடைகள் கொலைக் களங்களில்!

தென்மராட்சி, பெப். 2

வலிகாமம் பகுதியில் பொதுமக்களினால் கைவிடப்பட்டு வந்த கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கொல்களம் பரிசோதனைக்காக சாவகச்சேரி நகரசபை, கைதடி கிராம சபை, கொடிகாமம் கிராம சபை, பளை கிராமசபை ஆகியவற்றின் பணிமனைகளில் கட்டப்படுவதாகவும் —

வலிகாமத்தில் கால்நடைகளைக் கைவிட்டு வந்தவர்களின் கால்நடைகளும் இந்த இடங்களில் கண்டு பிடிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். உயர் அரச அதிகாரி ஒருவரின் மாடும் இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வரும்போது இவர் தமது மாட்டையும் கைவிட்டு வந்திருந்தார்.

அந்த மாடு வெட்டப்படுவதற்கு முன் கொல்களம் ஒன்றில் பரிசோதனைக்காக கட்டப்பட்டிருந்த சமயம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

வலிகாமத்தில் கால்நடைகளை திருடியோர் அவற்றை இங்கு இறைச்சிக்காக விற்பனை செய்கின்றனர் என்று நம்பப்படுகிறது. (இ-117)

## இடிபாடுகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகமாக நேற்று இருபது சடலங்கள் வரை இடிபாடுகளுக்குள் இருந்து வெளியே எடுக்கப்பட்டன.

அவற்றில் பெரும்பாலானவை எரிந்து கருகிய நிலையில் காணப்பட்டன.

இடிந்து நொருங்கிப் போயிருக்கும் — பல மாடிகளைக் கொண்ட — எட்டு கட்டடத் தொகுதிகளுக்குள் இன்னமும் எவரேனும் உயிருடன் சிக்கிக் கொண்டிருக்கின்றார்களா என்பதைக் கண்டறிய அதிகாரிகள் முயன்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடிபாடுகளை அகற்றும் வேலை தொடரத் தொடர இறந்தவர்களின் எண்ணிக்கையும் உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் கீழ் மாடிகள் பூரணமாகத் தகர்க்கப்பட்டிருப்பதால் அங்கும் நிலவறைகளுக்குள்ளும் இடிபாடுகளுக்கு இடையே சிக்கியிருப்போர் இவ்வளவு நீண்ட நேரம் உயிருடன் இருப்பது சாத்தியமல்ல என்று தீயணைப்புப் படைகளின் பிரதம தீயணைப்பு அதிகாரி ஜே. கன்னாங்கர குறிப்பிட்டார்.

## கேள்விகளுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொழும்பு மாநகரம் முழுவதும் பாதுகாப்புத் தீவிரப் படுத்தப்பட்டிருக்கும்போது குண்டு ஏற்றிய லொறி கொழும்புக்குள் ஊடுருவியது எப்படி என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க முடியாது திணறினார்.

## உருத்திரபுரம் பங்குத் தந்தை காயம்

தென்மராட்சி, பெப். 2

நேற்று நண்பகல் மிருசுவில் கண்டி வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — கார் விபத்தில் உருத்திரபுரம் பங்குத் தந்தை அருட்திரு சகாயதாஸ் அடிகள் (வயது 35) கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் வந்த தற்போது பருத்தித்துறையில் வசிக்கும் இவரது சகோதரர் பத்மராசனும் (வயது 42) படுகாயம் அடைந்தார்.

கடந்த மாதம் மரணமான வெற்றிலைக்கேணி பங்குத் தந்தை அருட்திரு கஸ்பார் ஜோண் லொறட் அடிகளின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு விட்டு சாவகச்சேரிக்கு வந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

(இ-117-13-15)

## புலிகளின் தளம்

கொழும்பு, பெப். 2

விடுதலைப் புலிகள் நிதி திரட்டுவதற்கு பிலிப்பீன்ஸை தளமாக பயன்படுத்தி வருகின்றனர் என்று பிலிப்பீன்ஸ் இராணுவ உளவறியும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றனவாம்.

கடந்த வருடம் மே மாதம் பிலிப்பீன்ஸ் தலைநகரில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து சட்டவிரோத நிதி திரட்டல் பற்றி தெரியவந்ததாக இலங்கை வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### V.M. சண்முகம் கணேசமூர்த்தி

காரைநகர் சம்பந்தர்கண்டியை பிறப்பிடமாகவும், கொழும்பு 74, பழைய சோனகத் தெருவில் வசித்தவருமான வி. எம். சண்முகம் கணேசமூர்த்தி 29-01-96 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம், கொழும்பு வர்த்தகர், காலஞ்சென்ற வி. எம். சண்முகம் (V.M.S) பரமேஸ்வரி தம்பதிகளின் புத்திரரும், காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வினாசித்தம்பி முருகேசு சுந்தரம் தம்பதிகளினதும், காரைநகர் களபூமி கரப்பிடியந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளினதும் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-01-96 இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறேன்.

தகவல்:
வே. குமாரசுவாமி
(மைத்துனர்)

(40049)

### விசுவலிங்கம் பரராசசிங்கம் (குட்டான்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ் சென்ற விசுவலிங்கம் தம்பதிகளின் கடைசிப் புதல்வனுமாகிய பரராசசிங்கம் (குட்டான்) (1-02-96) வியாழக்கிழமை காலமானார்.

இவர் வே. பரமேஸ்வரி, காலஞ் சென்ற பாலச்சந்திரன், வி. புவனேந்திரன் (ஆசிரியர்), வி. மகேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது அண்ணன் த. வேலாயுதபிள்ளை ''சாந்தி இல்லம்'' கச்சாய் வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கச்சாய் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
வி. புவனேந்திரன்
(அண்ணன் - சகோதரர்)

(40601)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

## கண்ணீர் அஞ்சலி

### காசித்தம்பி காசிலிங்கம்

01-02-1996 அன்று அகால மரணமடைந்த எமது நிலைய வளர்ச்சிக்கும், கிராம வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு உழைத்த சமூக சேவகன் கா. காசிலிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

ஸ்ரீகாந்தன் ச. ச. நிலையம்,
ஸ்ரீகாந்தன் விளையாட்டு கழகம்,
ஸ்ரீகாந்தன் பாலர் பாடசாலை,
மந்துவில் பொது நூலகம்,
மந்துவில் வாழ் மக்கள்.

மந்துவில்,
கொடிகாமம்.

(40555)

## மரண அறிவித்தல்

### காசித்தம்பி காசிலிங்கம்

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த காசித்தம்பி காசிலிங்கம் நேற்று (01-02-96) வியாழக்கிழமை அகால மரணமானார்.

இவர் காசித்தம்பி - செல்லம்மா ஆகியோரின் அருமைப் புதல்வனும், திருமதி கலைஞானம் அவர்களின் சகோதரனும், அம்பன் கார்த்திகேசு அவர்களின் மைத்துனரும், திரு. திருமதி படவீரசிங்கம் அவர்களின் பெறாமகனும், ஞானதீபன், ராஜதீபன், கார்த்திபன், ஹேமா, ஹேவிகா என்போரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [2-2-96] வெள்ளி பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இலுவன் மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. படவீரசிங்கம்
[சிறிய தகப்பன்]

[40554]

பிளவுஸ் பீஸ், முகூர்த்தப்பட்டுப் புடைவைகள், சேட்டிங், சூட்டிங், றெடிமேற் றவுசர் போன்றவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

யாழ். சோதி புடைவையகம்

நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி. (சி-2960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சாரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 02-02-96இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.